# பத்திரிக்கை செய்தி குறிப்பு

கிருஷ்ணகிரி, சென்னை சாலை, வி.ஜ.பி நகரைச் சார்ந்த முனுசாமி என்பவரின் மகன் திரு.எம்.கோவிந்தராஜ் அவர்கள் கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் கடந்த 13.12.2018 ஆம் தேதியன்று ஆஜராகி, தான் கிருஷ்ணகிரி கட்டிநாயனப்பள்ளி கிராமத்தில் 25 வீட்டுமனைகளுக்கான மனைபிரிவு செய்துள்ளதாகவும், அதற்காக மனைபிரிவு ஒப்புதல் பெறும் பொருட்டு, தருமபுரி மண்டல நகர ஊரமைப்பு அலுவலகத்தில் தேவையான ஆவணங்களுடன் விண்ணப்பித்ததாகவும், அப்போது அந்த அலுவலகத்தில் பணிபுரியும் தருமபுரி மண்டல துணை இயக்குநர் திருமதி.ஜி.வசந்தி அவர்கள் ரூ.50,000/- கையூட்டாக கேட்டு அதில் முதல் தவணையாக ரூ.25,000/- அவருக்கு தனியாக தரவேண்டும் என்றும், அவருக்குகீழ் அந்த அலுவலகத்தில் பணிபுரியும் கிருஷ்ணகிரி மாவட்ட மேற்பார்வையாளர் திரு.ஆர்.மணிகண்டன் அவர்கள் ரூ.3,00,000/- தனக்கு கையூட்டாக கேட்டு முதல் தவணையாக ரூ.50,000/- தரவேண்டும் என்று கேட்டதாகவும், அவர்கள் இருவர்மீதும் சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு புகார் தெரிவித்திருந்தார்.

அவருடைய புகாரின் அடிப்படையில் கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் கு.எண்.10/AC/2018 u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 ன் படி கடந்த 13.12.2018 ஆம் தேதி முதல் தகவலறிக்கை பதிவு செய்யப்பட்டு, அதன் தொடர்ச்சியாக இன்று 28.12.2018 ஆம் தேதி பொறி வைத்து பிடிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அந்த நிகழ்வின்போது, புகார்தாரர் திரு.எம்.கோவிந்தராஜ் அவர்கள் முதலில் மேற்பார்வையளர் திரு.ஆர்.மணிகண்டன் அவர்களை சந்தித்து மனைபிரிவு ஒப்புதல் பற்றி கேட்டபோது, தான் ஏற்கனவே கேட்டிருந்த பணம் ரூ.50,000/- தரவேண்டும் என்று அவர் கேட்டு, அந்த பணத்தை திரு.எ.ஹரிக்குமார் என்ற இடைத்தரகரிடம் கொடுக்குமாறு சொன்னதின்பேரில் அந்த பணம் ரூ.50,000/- ஐ அவரிடம் கொடுத்துள்ளார். பிறகு இணை இயக்குநர் திருமதி.ஜி.வசந்தி அவர்களை சந்தித்தபோது அவர் ஏற்கனவே கேட்டிருந்த பணம் ரூ.25,000/- தரவேண்டும் என்று கேட்டு, அவர் கூறியதின்பேரில் அவருக்கு அருகிலிருந்த அவருடைய இடைத்தரகர் திரு.எம்.வடிவேல் அவர்களிடம் அந்த பணம் ரூ. ரூ.25,000/- ஐ கொடுத்துள்ளார். இந்த பொறிவைப்பு நிகழ்வின்போது துணை இயக்குநர் திருமதி.ஜி.வசந்தி, மேற்பார்வையாளர் திரு.ஆர்.மணிகண்டன், இடைத்தரகர்கள் திரு.எ.ஹரிக்குமார் மற்றும் திரு.எம்.வடிவேல் ஆகியோர்களை கையும் களவுமாக பிடித்து இடைத்தரகர்களிடமிருந்து கையூட்டு பணம் ரூ.50,000/- மற்றும் 25,000/- ஆகியவை கைப்பற்றப்பட்டு புலன்விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த வழக்கு தொடர்பாக மேற்கண்ட நான்கு நபர்களும் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.